## களம் தேர்வு – 04

1. ‘தெள்ளமுது’ – பிரித்தெழுதுக

(A) தெள்+அமுது (B) தென்+அமுது (C) தெண்மை + அமுது (D) தெள்ளு + அமுது

2. நவரசங்களுள் பொருந்தாதது எது?

(A) இழிப்பு (B) இன்பம் (C) வியப்பு (D) அவலம்

3. திராவிட மொழிக் குடும்பம் பரவிய நில அடிப்படையில் எத்தனை வகைப்படும்

(A) 2 (B) 3 (C) 4 (D) 5

4. சரியற்ற இணைகள் எத்தனை?

1. தென்னிந்திய மொழிகள் எனப் பெயரிட்டவர் – வில்லியம் ஜோன்ஸ்
2. தமிழியன் எனப் பெயரிட்டவர் – ஹோக்கன்
3. வடமொழி ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது என கூறியவர் – பிரான்சிஸ் எல்லிஸ்
4. திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் – குமரிலபட்டர்
5. தமிழ் வடமொழியின் மகளன்று என்று கூறியவர் – கால்டுவெல்

(A) 1 இணை (B) 2 இணை (C) 3 இணை (D) 4 இணை

5. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) வட திராவிட மொழி – | 1) கன்னடம் | | (A) | 3 | 4 | 1 | 2 |
| b) தென் திராவிட மொழி – | 2) பிராகுயி | | (B) | 2 | 4 | 1 | 3 |
| c) நடுத் திராவிட மொழி – | 3) குறும்பா | | (C) | 3 | 1 | 4 | 2 |
| d) அண்மையில் கண்டறியப்பட்ட மொழி – | 4) தெலுங்கு | | (D) | 2 | 1 | 4 | 3 |

6. பிழையுற்ற இணையைத் தேர்க

(A) கன்னு, மூரு – தெலுங்கு (B) கண்ணு, மூரு – கன்னடம்

(C) கண்ணு, மூணு – மலையாளம் (D) கெண் – பர்ஜி

7. திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு எதில் காணப்படுகிறது?

(A) உயர்திணை ஒருமை (B) உயர்திணை பன்மை

(C) அஃறிணை ஒருமை (D) அஃறிணை பன்மை

8. சரியானதைத் தேர்க

(A) ரப்பர் – நெகிழி (B) பேனா – எழுதுகோல்

(C) பென்சில் – கரிக்கோல் (D) நோட்டு – தாள்கள்

9. பொருத்துக

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) தமிழ் | - | 1) நீ | (A) | 1 | 3 | 4 | 5 | 2 |
| b) துளு | - | 2) மரம் | (B) | 1 | 4 | 3 | 2 | 5 |
| c) தெலுங்கு | - | 3) நாலு | (C) | 5 | 3 | 4 | 2 | 1 |
| d) கன்னடம் | - | 4) ஈர்ரெண்டு | (D) | 2 | 3 | 4 | 5 | 1 |
| e) மலையாளம் | - | 5) நூறு | | | | | | |

10. கர்சர் (Cursor) என்பதன் கலைச்சொல் காண்க?

(A) உலவி (B) ஏவி (C) செதுக்கி (D) உறை

11. கூற்று 1 : எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது செய்வினை எனப்படும்

கூற்று 2 : வி, பி போன்ற விகுதிகளையும் செய், வை, பண்ணு போன்ற துணை வினைகளையும் தன்வினை பெற்றுவரும்.

கூற்று 3 : செயப்படுபொருளை முதன்மைப்படுத்தும் வினை செயப்பாட்டு வினை

கூற்று 4 : படு, பெறு, உண், ஆயிற்று, போயிற்று, போனது போன்ற துணை வினைகளை செய்வினை பெற்று வரும்

(A) கூற்று 1, 2 சரி / 3, 4 தவறு (B) கூற்று 1, 3 சரி / 2, 4 தவறு

(C) கூற்று 2, 4 சரி / 1, 3 தவறு (D) கூற்று 3, 4 சரி / 1, 2 தவறு

12. 'குமரன் மழையில் நனைந்தான்' - எவ்வகைத் தொடர்?

(A) செய்வினைத் தொடர் (B) தன்வினைத் தொடர்

(C) உடன்பாட்டு வினைத் தொடர் (D) பிறவினைத் தொடர்

13. பொருத்துக.

| | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|
| a) ஒன்றன் பால் வினைமுற்று விகுதி | - 1) ஆம் | (A) | 4 | 5 | 1 | 3 | 2 |
| b) தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | - 2) ஆ | (B) | 3 | 1 | 4 | 2 | 5 |
| c) முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | - 3) று | (C) | 2 | 4 | 5 | 3 | 1 |
| d) பலவின்பால் வினைமுற்று விகுதி | - 4) ஐ | (D) | 4 | 5 | 2 | 1 | 3 |
| e) முன்னிலை பன்மை வினைமுற்று விகுதி | - 5) மின் | | | | | | |

14. எதிர்கால இடைநிலையில் பொருந்தாததைத் தேர்ந்தெடு.

(A) ப் (B) ம் (C) வ் (D) க்

15. பொருந்தாத இணை எது?

(A) Philologist – இலக்கிய ஆய்வறிஞர் (B) Phonologist – ஒலியியல் ஆய்வறிஞர்

(C) Polyglot – பன்மொழி அறிஞர் (D) Phonetics – ஒலியியல்

16. பழமொழியை நிறைவு செய்க

கல்லாடம் படித்தவரோடு -------

(A) வில்லாடாதே (B) மல்லாடாதே (C) சொல்லாடாதே (D) B & C

17. கவிஞர் தமிழ் ஒளியின் நூல்களில் தவறானது எது?

(A) கண்ணப்பன் கிளிகள் (B) தமிழர்ப்பட்டி
(C) மாதவி காவியம் (D) வீராயி

18. 'பாற்படுத்தான் ஏகும் சொர்க்கத்து இனிது' - என்று நீர் மேலாண்மையின் பெருமையைக் கூறும் நூல் எது?

(A) திருக்குறள் (B) நாலடியார் (C) சிறுபஞ்சமூலம் (D) திரிகடுகம்

19. நான் உனக்கு ஒரு நூல் வாங்கி வைத்தேன் - இத்தொடரில் பயன்படுத்தப்பட்டுள்ள 'வை' என்னும் வினைச்சொல் எவ்வகை வினை?

(A) கூட்டுவினை (B) முதல்வினை (C) துணைவினை (D) எதுவுமில்லை

20. ஐம்பெருங்குழு மற்றும் எண்பேராயம் என இரண்டிலும் பங்குபெறுபவர் யார்?

(A) அமைச்சம் (B) படைத்தலைவர் (C) தூதர் (D) நகரமாந்தர்

21. சொல்லோடு பொருந்தாத பொருள் எது?

1. தடவரை - பெரியமலை 2. உறுபொருள் - மிகுந்தபொருள்
3. புலரி - கடல் 4. வசி - மழை 5. இவுளி - யானை

(A) 3 & 4 (B) 1 & 5 (C) 2 & 4 (D) 3 & 5

22. 'தாழ்பூந்துறை' என்பதன் இலக்கணக் குறிப்பு

(A) உவமைத் தொகை (B) பண்புத்தொகை (C) வினைத்தொகை (D) உம்மைத் தொகை

23. சந்திப்பிழை அடிப்படையில் தவறான பொருள்தரும் தொடரைக் காண்க.

(A) பாரி மழையைப் போல் கைமாறு கருதாமல் உதவி செய்வான்.
(B) போரில் இறந்தவர்களுக்கு நடுகல் நடப்பட்டது.
(C) முகிலன் வீட்டுப்பாடம் செய்யாமல் ஆசிரியரிடம் பொய்ச்சொல் கூறினான்.
(D) வளவன் தோப்புக்கள் குடித்தான்.

24. முறையற்றது எது / எவை?

(A) ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும் / ஆறாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகாது
(B) இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது / இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்
(C) உவமைத் தொகையில் வல்லினம் மிகும் / உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது
(D) ஐந்தாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகாது / மூன்றாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்

25. பொருந்தாத இணைகள் எத்தனை?

1. மகி - பசு 2. வயம் - குளம் 3. இருசு - மூங்கில்
4. துவனம் - ஒலி 5. சிட்டம் - உயர்வு 6. மொய்ம்பு - தோள்

(A) 1 இணை (B) 2 இணை (C) 3 இணை (D) 4 இணை

26. பொருந்தாத பொருளுடையது எது?

(A) வலையில் வாலை மீன் சிக்கியது (B) மரை காட்டில் மேய்ந்தது
(C) பரவையின் வேறு பெயர் அழுவம் (D) குழவி கரையில் குளித்தது

27. ‘தகழ்வு’ என்பதன் சரியான பொருள் காண்க

(A) நண்பு (B) இழிவு (C) அறிவு (D) அழுதல்

28. திருக்குறளின் உரையாசிரியர்களில் தவறானவர் யார்?

(A) மல்லர் (B) தருமர் (C) நச்சினார்கினியார் (D) தாமத்தர்

29. பிழையுற்ற சொற்றொடரைத் தேர்க

(A) திருக்குறளை முதலில் அச்சிட்டவர் (ம) ஆண்டு - தஞ்சை ஞானப்பிரகாசர் /1812

(B) முதலில் உரை எழுதியவர் - பரிமேலழகர்

(C) முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் - ஜி.யு.போப்

(D) இருமுறைவரும் ஒரே அதிகாரம் - குறிப்பறிதல்

30. பொருந்தாத இணை எது?

(A) சீரோ கிராஃபி - முறையான எழுத்துமுறை (B) பான்டெலிகிராஃப் - தொலைநகல் கருவி

(C) ஸ்மார்ட் கார்ட் - திறன் அட்டை (D) பயோ மெட்ரிக் - ஆளறிசோதனை

31. கூற்று 1: எழிலன் தீ பற்றியது என கத்தி கொண்டு வந்தான்.

கூற்று 2: இனியன் கிளையை வெட்ட கத்திக் கொண்டு வந்தான்.

(A) கூற்று 1, 2 சரி (B) கூற்று 1 சரி / 2 தவறு (C) கூற்று 1, 2 தவறு (D) கூற்று 1 தவறு, 2 சரி

32. சந்திப்பிழை அடிப்படையில் வேறுபட்டதைத் தேர்ந்தெடு

(A) வேலையில்லாபட்டதாரி (B) கீழ்பக்கம்

(C) திட்டக்குழு (D) பழகுத்தமிழ்

33. பொருந்தாததைத் தேர்க

(A) கற்பூரம் - சூடம் (B) பெட்ரோல் - கன்னெய் (C) காஃபி - குழம்பி (D) காரம் - காடிப்புளியம்

34. மங்காத தணற்பிழம்பே! மாணிக்கக் குன்றே! தீர்ந்த தங்கத்தின் தட்டே!

வானத் தகளியிற் பெருவிளக்கே! - என்று பரிதியை வாழ்த்தியவர் யார்?

(A) கனக சுப்புரத்தினம் (B) துரை மாணிக்கம்

(C) கவிஞாயிறு (D) மக்கள் கவிஞர்

35. சரியான வினை அமைப்புக் கொண்ட தொடரைத் தேர்க

(A) காலணி சரியாக பொருந்தியதால் நடந்து சென்று கருவியைப் பொருந்தினான்.

(B) காலணி சரியாக பொருத்தியதால் நடந்து சென்று கருவியைப் பொருத்தினான்.

(C) காலணி சரியாக பொருத்தியதால் நடந்து சென்று கருவியைப் பொருந்தினான்.

(D) காலணி சரியாக பொருந்தியதால் நடந்து சென்று கருவியைப் பொருத்தினான்.

36. ‘கல்வியழகே அழகு’ - என்று கூறும் நூல் எது?

(A) மூதுரை (B) கொன்றை வேந்தன் (C) நாலடியார் (D) தனிப்பாடல்

37. ‘மேதைக்கு உரையாமை செல்லும் உணர்வு’ - இப்பாடலடி எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

(A) திரிகடுகம் (B) ஆசாரக்கோவை (C) சிறுபஞ்சமூலம் (D) முதுமொழிக்காஞ்சி

38. பல பொருள் தரும் ஒரு சொல் எது?

(A) உறு (B) கடி (C) தவ (D) நனி

39. 'ஒட்பம்' - என்பதன் பொருளில் பொருந்தாதது எது?

(A) அழகு (B) அறிவு (C) தெளிவு (D) வலிமை

40. பொருத்துக

a) உயிர் முன் உயிர் - 1) பனி + காற்று
b) உயிர் முன் மெய் - 2) மரம் + கிளை
c) மெய்ம் முன் உயிர் - 3) மணி + அடி
d) மெய்ம் முன் மெய் - 4) ஆல் + இலை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

41. கூற்று 1 : 'நாரின்மை' என்பதன் பொருள் - அன்பு இல்லாத் தன்மை

கூற்று 2 : 'பீடிகை' என்பதன் பொருள் - அரியணை

(A) கூற்று 1, 2 சரி (B) கூற்று 1 சரி / 2 தவறு (C) கூற்று 1, 2 தவறு (D) கூற்று 1 தவறு / 2 சரி

42. பொருத்துக

a) Simile - 1) இயைபுத் தொடை
b) Metaphor - 2) அசை
c) Syllable - 3) உவமையணி
d) Rhyme - 4) உருவக அணி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

43. சொல்லையும் பொருளையும் பொருத்துக

a) நசை - 1) ஆண்யானை
b) பொளிக்கும் - 2) விருப்பம்
c) வேழம் - 3) சினம்
d) வெகுளி - 4) பெண் யானை
e) பிடி - 5) உரிக்கும்

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 4 | 5 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 5 | 1 | 3 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 | 5 |
| (D) | 3 | 2 | 5 | 1 | 4 |

44. விடைக்கேற்ற வினாவைத் தேர்க

விடை : பானையின் வெற்றிடமே நமக்கு பயன்படுகிறது

(A) பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகிறது? (B) பானை எப்படி நமக்குப் பயன்படுகிறது?

(C) பானை எதனால் நமக்குப் பயன்படுகிறது? (D) பானை எங்கு நமக்குப் பயன்படுகிறது?

45. "தொண்டு செய்து பழுத்த பழம்

தூயதாடி மார்பில் விழும்" என்று பெரியாரைப் பாடியவர் யார்?

(A) கண்ணதாசன் (B) பாரதிதாசன் (C) வெ.இராமலிங்கனார் (D) தாராபாரதி

46. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?

(A) வருக்கை - இருக்கை (B) புள் - தாவரம்

(C) அள்ளல் - சேறு (D) மடிவு - தொடக்கம்

**47. பொருத்துக**

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) புரிசை | - 1) அங்காடி | | (A) | 4 | 1 | 3 | 5 |
| b) அணங்கு | - 2) மதில் | | (B) | 2 | 4 | 3 | 5 |
| c) பணை | - 3) முரசு | | (C) | 4 | 1 | 2 | 3 |
| d) கயம் | - 4) தெய்வம் | | (D) | 3 | 1 | 4 | 2 |
| | - 5) நீர் நிலை | | | | | | |

**48. மரபுப்பிழை அற்றத் தொடரைத் தேர்க**

(A) **இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்**

(B) **கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டாள்**

(C) **நேற்று தென்றல் காற்று அடித்தது**

(D) **அணில் பழம் கொறித்தது**

**49. "புரைதப" என்ற சொல்லின் எதிர்ச்சொல் அறிக**

(A) **இன்பம்** (B) **குற்றமின்றி** (C) **குற்றம்** (D) **துன்பம்**

**50. பொருத்துக**

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a) செறு | - 1) பவளம் | (A) | 4 | 1 | 2 | 3 |
| b) முருகு | - 2) நிலவு | (B) | 2 | 3 | 4 | 1 |
| c) மதியம் | - 3) தேன் | (C) | 3 | 1 | 4 | 2 |
| d) துவரை | - 4) வயல் | (D) | 4 | 3 | 2 | 1 |

**51. 'உழை' என்பதன் பொருள் யாது?**

(A) **மலைநெல்** (B) **குறிஞ்சிப்பறை** (C) **ஒரு வகை மான்** (D) **யானை தந்தம்**

**52. பிழையற்றத் தொடரைத் தேர்க**

(A) **மதீனா சிறந்த இசை வல்லுநர் வேண்டும்** (B) **நல்ல தமிழில் எழுதுவோம்**

(C) **மலர்விழிதான் பரிசு உரியவள்** (D) **குழலியும் பாடத் தெரியும்**

**53. கீழ்க்காண்பவனவற்றுள் வினாத் தொடர் எது?**

(A) **பாரதியார் இருபதாம் நூற்றாண்டில் இணையற்ற கவிஞர் ஆவார்**

(B) **என்னே தமிழ் மொழியின் அழகு!**

(C) **நீ திருக்குறள் படித்தாயா?**

(D) **நல்ல நூல்களை தேடிப்பிடித்து படி**

**54. இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு உரியதாய் வருவது எது?**

(A) **பெயர்ச்சொல்** (B) **வினைச்சொல்** (C) **உரிச்சொல்** (D) **இடைச்சொல்**

**55. 1. ---- என்னும் இடைச்சொல் அழுத்தப் பொருளில் வருகின்றது**

**2. ------- இச்சொல் வரையறைப் பொருள் தருகிறது**

(A) **ஓ, ஏ** (B) **தான், மட்டும்** (C) **உம், தான்** (D) **ஆவது, கூட**

56. மரபுப்பிழையற்றத் தொடரைத் தேர்க

(A) அலறும் மயிலும், கூவும் ஆந்தையும், அகவும் சேவலும் போன்ற இயற்கையின் அழகான ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும்

(B) அகவும் மயிலும், கூவும் சேவலும், அலறும் ஆந்தையும் போன்ற இயற்கையின் அழகான ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும்

(C) அலறும் ஆந்தையும், கூவும் மயிலும், அகவும் சேவலும் போன்ற இயற்கையின் அழகான ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும்.

(D) கூவும் ஆந்தையும், அகவும் மயிலும், அலறும் சேவலும் போன்ற இயற்கையின் அழகான ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும்.

57. சரியானக் கூற்றைத் தேர்க

1. அன்று என்பது ஒருமைக்கு உரியது

2. அல்ல என்பது பன்மைக்கு உரியது

3. இது பழம் அல்ல, இவை பழங்கள் அன்று

(A) 1 மட்டும் (B) 2 மட்டும் C) 1, 2 மட்டும் (D) அனைத்தும்

58. ------ பெரிய மரம், ------- ஆண்டு பழமையானது
விடுபட்ட இடத்தை நிரப்புக

(A) எத்தனை, எத்துணை (B) எத்துணை, எத்துணை

(C) எத்தனை, எத்தனை (D) எத்துணை, எத்தனை

59. பொருத்துக

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) உவம உருபுகள் | - | 1) ஆ, அல், இல் | | (A) | 1 | 4 | 2 | 3 |
| b) வினா உருபுகள் | - | 2) போல, மாதிரி | | (B) | 2 | 1 | 4 | 3 |
| c) எதிர்மறை இடைநிலை | - | 3) ஆ, ஓ | | (C) | 3 | 2 | 4 | 1 |
| d) வியங்கோள் விகுதி | - | 4) க, இய | | (D) | 2 | 3 | 1 | 4 |

60. "நாறுவ" என்ற சொல்லின் பொருள் யாது?

(A) முளைப்ப (B) முதுமை அடையாமல் (C) கெடாதிருத்தல் (D) மேதை

61. சிறுபஞ்ச மூலத்தில் கூறப்படும் வேர்களின் தொகுப்பில் சரியான ஒன்றைத் தேர்க

(A) சிறுவழுதுணை, பெறுவழுதுணை, கண்டங்கத்திரி, சிறுமல்லி, பெருமல்லி

(B) கண்டங்கத்திரி, நெருஞ்சி, பெறுவழுதுணை, சிறுவழுதுணை, பெருமல்லி

(C) கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி

(D) கண்டங்கத்திரி, நெருஞ்சி, சுக்கு, மிளகு, திப்பிலி

62. சிறுபஞ்சமூலம் நூலின் ஆசிரியர் யார்?

(A) கணிமேதாவியார் (B) சாத்தனார் (C) காரியாசன் (D) பூதஞ்சேந்தனார்

63. பாரதிதாசனாரின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற பிசிராந்தையார் எவ்வகை நூல்?

(A) நாடக நூல் (B) கவிதை நூல் (C) உரைநடை நூல் (D) கட்டுரை நூல்

64. பொருந்தாததைத் தேர்க

(A) பாண்டியன் பரிசு (B) சந்திரிகையின் கதை (C) இருண்ட வீடு (D) தமிழியக்கம்

65. பொருத்துக

a) தணல் - 1) பெரியகடல்
b) யாண்டும் - 2) எப்பொழுதும்
c) நவிலல் - 3) நெருப்பு
d) மாக்கடல் - 4) சொல்லல்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

66. “பெண்ணடிமை தீரும் வரை மண்ணடிமை தீருமோ” என இடி முழக்கம் செய்தவர் யார்?

(A) பாரதியார் (B) பாரதிதாசன் (C) தாராபாரதி (D) வெ.இராமலிங்கனார்

67. “கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி” என்று கல்வியின் சிறப்பை எடுத்துரைத்தவர்?

(A) ஔவையார் (B) முன்றுறை அரையனார் (C) கணிமேதாவியார் (D) சமண முனிவர்கள்

68. பின்வருவனவற்றுள் பாவேந்தருடன் தொடர்புடைய கவிதையைத் தேர்க

(A) பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்

(B) மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா...

(C) பெண் எனில் பேதை என்ற எண்ணம் இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும் உருப்படல் என்பது சரிப்படாது

(D) பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா

69. பின்வரும் எந்நூலில் நன்மை தருவன, தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்னும் வகையில் வாழ்வியல் உண்மைகள் எடுத்தாளப்படுகின்றன?

(A) நாலடியார் (B) ஏலாதி (C) சிறுபஞ்சமூலம் (D) திரிகடுகம்

70. பொருத்துக

a) ஏலாதி - 1) 5 கருத்துகள்
b) திரிகடுகம் - 2) 6 கருத்துகள்
c) சிறுபஞ்சமூலம் - 3) 3 கருத்துகள்

| | a | b | c |
|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 |
| (B) | 3 | 1 | 2 |
| (C) | 1 | 2 | 3 |
| (D) | 2 | 3 | 1 |

71. பொருத்தமான உரிச்சொற்களால் நிரப்புக

1. ------- விடுதும், --------- சிறந்தது -------- பெரும்பொதுக் கூட்டம்

(A) உறு, சால, கடி (B) கடி, சால, மா (C) தவ, கடி, தட (D) கடி, தவ, வாள்

72. சரியான விடையைத் தேர்க – சிறுபஞ்சமூலம்

(A) காப்பிய இலக்கியம் (B) சங்க இலக்கியம் (C) அற இலக்கியம் (D) தற்கால இலக்கியம்

73. மாறுபட்ட ஒன்றைத் தேர்க

(A) வினவினான் (B) செப்பினாள் (C) உரைத்தான் (D) பகன்றாள்

74. “முருகு” என்ற சொல்லின் பொருளில் பொருந்தாத ஒன்றைத் தேர்க

(A) தேன் (B) குறிஞ்சிப்பறை (C) மணம் (D) அழகு

75. சரியான விடையைத் தேர்க

1. தென்னை மட்டையிலிருந்து நார் -------

2. கொடியிலுள்ள மலரை ------- வா

(A) எடுத்தார், பறித்து (B) உரித்தார், கொய்து (C) பிரித்தார், எடுத்து (D) செய்தார், பறித்து

76. பொருத்தமான சொல்லால் நிரப்புக

பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்

அறம் நாணத் தக்கது -------

(A) ஆகும் (B) படை (C) தலை (D) உடைத்து

77. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) தெங்கு | - | 1) பெருந்தவம் | (A) | 2 | 4 | 1 | 3 |
| b) நெற்றி | - | 2) திரண்டநிதி | (B) | 4 | 1 | 2 | 3 |
| c) கொழுநிதி | - | 3) உச்சி | (C) | 4 | 3 | 2 | 1 |
| d) நற்றவம் | - | 4) தேங்காய் | (D) | 3 | 4 | 2 | 1 |

78. "மாகால்" என்ற சொல்லின் பொருளைத் தேர்க

(A) தென்றல் (B) கடல் (C) அங்காடி (D) பெருங்காற்று

79. பொருத்துக

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) கயிறு திரித்தல் | - | 1) பொய் அழுகை | (A) | 4 | 3 | 2 | 1 | 5 |
| b) ஓலை கிழிந்தது | - | 2) விடாப்பிடி | (B) | 3 | 5 | 1 | 2 | 4 |
| c) முதலைக் கண்ணீர் | - | 3) இல்லாததை சொல்லல் | (C) | 5 | 3 | 2 | 1 | 4 |
| d) குரங்குப்பிடி | - | 4) மறைந்து போதல் | (D) | 1 | 2 | 3 | 4 | 5 |
| e) நீர்மேல் எழுத்து | - | 5) வேலை போய்விட்டது | | | | | | |

80. பிரித்தெழுதுக - தண்டரளம்

(A) தண்டு+அரளம் (B) தண்+தரளம் (C) தண்டு + தரளம் (D) தன்மை + தரளம்

81. "Corolla" என்பதன் தமிழ்சொல்

(A) அயனி (B) புள்ளி வட்டம் (C) அல்லி வட்டம் (D) மகரந்தச் சேர்க்கை

82. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) Orbit | - | 1) இணைதிறன் | (A) | 3 | 4 | 2 | 1 |
| b) Ion | - | 2) கன்றிப்போன காயம் | (B) | 3 | 4 | 1 | 2 |
| c) Valency | - | 3) ஆற்றல் மட்டம் | (C) | 4 | 3 | 1 | 2 |
| d) Bruise | - | 4) அயனி | (D) | 4 | 1 | 3 | 2 |

83. "Atoms" என்பதன் தமிழ்சொல்

(A) சிறிய துகள்கள் (B) அணுக்கள் (C) மூலக்கூறு (D) A & B சரி

84. "Cation" என்பதன் தமிழ்சொல்

(A) நேர்மின் அயனி (B) எதிர்மின் அயனி (C) திசைவேகம் (D) முடுக்கம்

85. வானியல் பொருள்களைப் பற்றி படிக்கும் இயற்பியல் பிரிவு

(A) Celestial Bodies (B) Astronomy (C) Astronaut (D) Astrology

86. "Pollination" என்பதன் தமிழ்சொல்

(A) அயல் மகரந்த சேர்க்கை (B) தன் மகரந்த சேர்க்கை

(C) மகரந்த சேர்க்கை (D) புல்லி வட்டம்

87. தவறானது எது?

(A) Calyx - புல்லிவட்டம் (B) Matter - பருப்பொருளின் அளவு

(C) Coloumb - மின்னூட்டத்தின் அலகு (D) Molecules - மூலக்கூறுகள்

88. "Pustules" என்பதன் தமிழ்சொல்

(A) மாசுபடுதல் (B) கொப்பளங்கள் (C) ஆற்றல் (D) சமநிலை

89. "Fragmentation" என்பதன் தமிழ்சொல்

(A) நறுமணம் (B) துர்நாற்றம் (C) ஒட்டுதல் (D) துண்டாதல்

90. "Gingivitis" என்பதன் தமிழ்சொல்

(A) புவியீர்ப்பு (B) பல் தட்டை (C) பல் ஈறுவீக்கம் (D) மரபுத் தொடர்

91. தவறான இணையைக் கண்டறிக

(A) அவி உணவு – வேத உணவு (B) அலகிலா – அளவற்ற

(C) அமலன் – குற்றம் புரிந்தவன் (D) அரு – உறுவமற்றது

92. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) அம்பி | - | 1) திருமால் | (A) | 2 | 1 | 4 | 3 |
| b) அரி | - | 2) பிரம்மா | (B) | 2 | 4 | 1 | 3 |
| c) அரன் | - | 3) படகு | (C) | 3 | 1 | 4 | 2 |
| d) அயன் | - | 4) சிவன் | (D) | 3 | 4 | 1 | 2 |

93. தவறான இணையைக் கண்டறிக?

1. அலர் – பழி 2. அழகு– நெற்கதிர் 3. அளவில் – தழுவி

4. அழல்– நெருப்பு 5. அசாவாமை– அசையாதிருத்தல்

(A) 1, 3, 4 தவறு (B) 2, 5 தவறு (C) 1, 4 தவறு (D) 3, 4, 5 தவறு

94. வாக்கியம் 1: "அல்லல்" என்பதன் எதிர்ச்சொல் "இன்பம்"

வாக்கியம் 2: "அள்ளல்"என்பதன் எதிர்ச்சொல் "தூய்மை"

(A) வாக்கியம் 1 சரி (B) வாக்கியம் 2 சரி (C) இரண்டும் சரி (D) இரண்டும் தவறு

95. "அசை" என்னும் சொல்லிற்கு பொருத்தமில்லாத பொருளை கண்டுபிடி

(A) தளர்ச்சி (B) செய்யுறுப்பு (C) அசைதல் (D) நிலையற்ற

96. சரியான இணையைக் கண்டறிக?

(A) அசும்பு – நிலம் (B) அருகுற – தொலைவில் (C) அளி – வண்டு (D) அழுவம் – கப்பல்

97. "ஆகடியம்" என்ற சொல்லின் பொருள் யாது?

(A) துகில் (B) ஏளனம் (C) அமைந்த (D) செருக்கு

98. "ஆலகாலம்" என்ற சொல்லின் பொருள் யாது?

(A) நஞ்சு (B) மாலை (C) ஈடுபாடு மிக்கவர் (D) அமிழ்தம்

99. "ஆர்கலி" என்ற சொல்லிற்கு பொருத்தமில்லாத சொல்லை கண்டறிக

(A) கடல் (B) வெள்ளம் (C) வெல்லம் (D) பேரொலி

100. பொருத்துக

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) இந்து - | 1) துன்பம் | | (A) | 3 | 4 | 5 | 1 | 2 |
| b) ஆழி - | 2) வரவு | | (B) | 3 | 5 | 1 | 2 | 4 |
| c) இறும்பூது - | 3) நிலவு | | (C) | 5 | 3 | 4 | 2 | 1 |
| d) இடும்பை - | 4) சக்கரம் | | (D) | 2 | 4 | 5 | 1 | 3 |
| e) ஆவது - | 5) மகிழ்ச்சி | | | | | | | |